**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 323 /2017 |
| Deposition of witness | | PW- 1 /LW- 1 |
| Name | | திரு. பிரவீன்குமார் |
| Father's/Husband Name | | திரு. ஆறுமுகம் |
| Village | | கீழக்குறிச்சி |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 28/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24th day of July 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற தலைமை காவலர் முத்துராமலிங்கம் என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பட்டுக்கோட்டை தாலுக்கா கீழக்குறிச்சி அண்ணாநகரில் வசித்து வருகிறேன். நான் கீழக்குறிச்சி ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டி வருகிறேன். ஆஜர் எதிரிகள் இறந்துபோன எதிரி பிரவீன்குமார் ஆகியோரை தெரியும். ஆஜர் 1ம் எதிரி ரவிசந்திரன் என்னுடன் எங்கள் ஸ்டாண்டு ஆட்டோ ஓட்டுனர், மற்ற எதிரிகள் 1ம் எதிரியின் உறவினர்கள். எனக்கும் 1ம் எதிரி ரவிசந்திரனுக்கும் ஆட்டோ சவாரி சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. இது சம்மந்தமாக 25.12.2016 ந் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் நான் ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் ரவிசந்திரன், சதிஷ்குமார், மகேஷ்வரன் மற்றும் இறந்துபோன எதிரி பிரவீன்குமார் ஆகியோர் TN 49 DX 8253 என்ற ஆட்டோவிலும் பதிவு எண் இல்லாத இன்னொரு ஆட்டோவிலும் வந்த எதிரிகள் நால்வரும் என்னை பார்த்து தேவடியா, குச்சிகாரி மகனே என்று அசிங்கமாக பேசி

எதிரி ரவிசந்திரன் பெல்ட்டால் என் முதுகிலும் எதிரி சதிஷ்குமார் கம்பியால் எனது வலது நெற்றியிலும் மற்ற எதிரிகள் இரண்டு பேரும் கட்டையால் அடித்து காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் அருகில் இருப்பவர்கள் ஓடி வரவும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று எதிரிகள் கொலைமிரட்டல்விட்டு ஓடிவிட்டனர். இது சம்மந்தமாக நான் இரவு நேரம் ஆனதால் மறுநாள் மதுக்கூர் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படுவது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் மீது இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆட்டோவிலிருந்து கீழே விழுந்துவிட்டு அந்த காயத்தை பயன்படுத்தி பொய்யாக எதிரிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலே சம்பவம் நடந்து இருந்தால் நான் உடனடியாக காவல் நிலையம் சென்று இருப்பேன், இல்லாவிட்டால் மருத்துவமனை சென்று இருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை